### மெட்ரோ ரெயில்களில்

# முதல் வகுப்பு பெட்டிகள் மகளிருக்காக ஒதுக்கீடு!

## சாதாரண கட்டணம் வசூலிக்கப்படும்!!

சென்னை, நவ.20–' சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்எப்போதும்மகளிர்பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும்வசதியான போக்குவரத்தினை வழங்கி வருகிறது. பயணிகளுக்கு சிறந்த வசதிகளை வழங்க பல முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வருகின்ற 23.11.2020 (திங்கட்கிழமை) முதல்சென்னை மெட்ரோ ரெயில்களில் உள்ள அனைத்து முதல்வகுப்பு பெட்டிகளும்மகளிர் மட்டுமே பயணிக்கும் பிரத்யேக பெட்டிகளாக மாற்றப்படுகின்றன.

இதன்மூலம்மெட்ரோ ரெயில்களில் பயணம்செய்யும்போது மகளிர்பயணிகளின் வசதிக்காக கூடுதல்இருக்கைகள் ஏற்படுத்திட முடியும். தற்போதுள்ளசாதாரணகட்டணத்திலேயே பயணிக்கலாம்.

இதைத்தவிர, சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம் மகளிர்பயணிகளின் பாதுகாப்பிற்காக பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்கள்மற்றும்மெட்ரோரெயில்கள்கண்காணிப்புக்கேமராக்கள் மூலம் முழு நேரமும்முழுமையாக கண்காணிப்பது, மகளிருக்கென தனி கழிப்பறைகள், வாடிக்கையாளர்சேவை வசதிகள், மது அருந்தியவர்கள்பயணிக்கத்தடை, புகைபிடிப்பதற்கு தடை,

மற்றும்பிற இடையூறுகளிலிருந்து பாதுகாப்பது, அனைத்துமெட்ரோரெயில் நிலையங்களிலும்பாதுகாப்பு பணியாளர்களை பணியமர்த்தி கண்காணிக்கப்படுகிறதுஎன்றுசென்னை மெட்ரோரெயில்நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.